4. விதி 110-இன்கீழ் அமைச்சரின் அறிக்கை.

வறட்சி நிவாரணப் பணிகள் குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுடைய குறிப்புக்கு விளக்கம் அளிப்பதற்கு முன்னாலே விதி 110-ன்கீழ் ஒரு அறிக்கையை முதலிலே வைக்க விரும்புகிறேன். அதற்குப் பிறகு அவருக்கு நான் விளக்கம் தர விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் நிலவி வரும் வறட்சி நிலைமையை ஆராய்ந்து பல்வேறு குடிநீர் பணி களுக்காகவும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் ரூபாய் 34 கோடியே 47 லட்சத்தை ஏற்கெனவே அனுமதித்து உள்ளார்கள். 8—4—1987 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலைமையை மீண்டும் ஆராய்ந்து வறண்டு போன குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு மேலும் 2 கோடியே 50 லட்ச ரூபாயை அனுமதித்துள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

8—4—1987 அன்று தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் நிவாரணப் பணிகளின் முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்தார்கள். சிறப்பு ஆணையர்கள், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்ற அரசு நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் ஆகியோர் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். 3—4—1987 வரை 3,528 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. குடிநீர் பணிக்காக 9 கோடியே 9 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் இதுவரை செலவிடப்பட்டு இருக் கிறது. விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டங்களின் மூலம் 34 கோடியே 36 லட்ச ரூபாய் செலவிடப் பட்டு ஒரு கோடியே 75 லட்சம் மனித வேலை நாட்கள் உருவாக் கப்பட்டுள்ளன. சென்னை நகர குடிநீர் வாரியம் குடிநீரை எவ் வாறு சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று முன்

கூட்டியே மக்களிடையே பிரச்சாரம் செய்வதுடன் மக்களுக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்றும் தலைமைச் செயலாளர் அவர்கள் உரிய அலுவலர்களை அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

வறட்சி நிவாரணக் குழுவால் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளின் பயன் உடனடியாக மக்களுக்குச் சேரும் வகையில் சிறப்பு ஆணையாளர்கள், துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்வாக இயந்திரங்களை முடுக்கி விட வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அவர்கள் அனைவருக்கும் அறிவுறுத்தி இருக்கிறார்கள். வறட்சி நிலைமை பற்றிக் கண்டறிய தமிழகத்திற்கு 5 பேர் கொண்ட உறுப்பினர் குழு ஒன்றை மத்திய அரசு அனுப்பி வைக்க இருக்கிறது என்பதை இந்த அவைக்கு ஏற்கனவே நான் அறிவித்தேன். அந்தக் குழுவினர் 2 குழுவாகப் பிரிந்து பார்வையிட இருக்கிறார்கள். அவர்கள் தமிழகத்திற்கு இந்த மாதம் 12 ஆம் தேதி மாலை இங்கே வந்து சேருகிறார்கள். 13, 14 ஆகிய இரண்டு நாட்களில் தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிடுகிறார்கள். 15 ஆம் தேதி இங்கே வந்து அலுவலர்களோடும் மற்றவர்களோடும் கலந்துரையாடல் நடத்துகிறார்கள். அந்த வகையில் ஒரு குழு 13 ஆம் தேதி திருச்சி, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும், ஏப்ரல் 14 ஆம் தேதி காமராஜ், திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களுக்கும் செல்ல இருக்கிறது. மற்றும் ஒரு குழு ஏப்ரல் 13 ஆம் தேதி காலையிலே கோவை மாவட்டத்திற்கும் அன்று மாலையிலும் 14 ஆம் தேதியும் மதுரை மாவட்டத்தினுடைய பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறது. இந்த 2 நாட்களிலும் அவர்கள் சுற்றுப்பயணம் செய்ததற்குப் பிறகு அவர்கள் 15 ஆம் தேதி இங்கே வந்து அரசு அலுவலர்களுடன் கலந்துரையாடல் நடத்துகிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் ஆங்காங்கு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்கிறபோது ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களோடும் மற்றவர்களோடும் அவர்கள் கலந்துரையாடுவதற்கு நேரம் வகுக்க

1987 ஏப்ரல் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சுற்றுப் பயணத்தில் ஈடுபடுகிறபோது ஆங்காங்கு சில குறிப்பிட்ட வறட்சிப் பகுதிகளை நேரடியாக கண்டறிந்து நிலைமைகளை அவர்கள் அறிந்து கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இடையிலே சில மணித் துளிகள் அவர்களுக்கு அவகாசம் இருக்குமானால், அதற்கான வாய்ப்பு கிடைக்குமேயானால், அதை வருவாய்த் துறை சிறப்பு ஆணையாளர் மூலமாகவும், தலைமைச் செயலாளர் அவர்கள் வாயிலாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குச் சொல்லி ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புவார்களானால் ½ மணி நேரமோ, ¾ மணி நேரமோ ஒதுக்கிடு செய்வதற்கு அவர்களுடைய விருப்பத்தை அறிந்து ஏற்பாடு செய்யலாம். ஆனால் ஏற்பாடு செய்ய முடியும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று சொல்கிறேன். அப்படி இருந்தால் ஆங்காங்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பார்கள்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படாமை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை உங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனது சேப்பாக்கம் தொகுதியில் சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள நேப்பியர் பூங்காவில் சென்னை மாநகராட்சியின் சார்பாக 62-வது வருடாந்திர மலர்க் காட்சி துவக்க விழா இன்று மாலை 6 மணிக்கு நடைபெற இருக்கிறது. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதைத் துவக்கி வைக்கிறார்கள். தனி அதிகாரி அவர்கள் தலைமை தாங்குகிறார்கள். நான் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், அதேபோல் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி அவர்கள். இரண்டு பேரும் அந்த நிகழ்ச்சியில் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறோம். விளம்பரத்திலும் எங்கள் பெயர் இல்லை, அழைப்பிதழும் அனுப்பப்படவில்லை. ஒரு கட்சி சம்பந்தமான நிகழ்ச்சியாக இருந்தால் நான் கேட்கப் போவது இல்லை. அது அரசாங்க நிகழ்ச்சி. எதிர்க்கட்சியைச் சேர்ந்த